# கடவுளைக் காண்பிக்கிறேன் வாருங்கள்



ஆல்ஃப்ரட் தேவதாசன்

# கடவுளைக் காண்பிக்கிறேன் வாருங்கள்

Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் M.Sc., M.Phil., Ph.D.

# முகவுரை

மக்கள் கடவுளைக் காண்பதற்கு வழிகாட்டியாக விளங்கும் ஒரு நூல் எழுத வேண்டும் என்ற ஆவலினால் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. யாராயிருந்தாலும் இதைக் கருத்தாகப் படித்து, சிந்தித்து, திறந்த மனதுடன் ஏற்றுக் கொண்டு, பின்பற்றினால் அவர்கள் கடவுளைக் காண்பது நிச்சயமாகும்.

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

என்ற வள்ளுவனின் வாக்கின்படி இந்நூலின் மூலம் மெய்ப்பொருளைக் கண்டுகொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

இந்நூலை வாசித்த பின்னர் குறைந்தது பத்துப் பேராவது வாசிக்கும்படி உங்கள் குடும்பத்தினர், நண்பர், அயலகத்தார், உறவினர் முதலானவர்கட்குக் கொடுங்கள். இந்நூலின் மூலம் நீர் அடையும் அனுபவங்களை எமக்கு எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்நூலை யார் வேண்டுமானாலும் கருத்து மாறாமல் அச்சிட்டு விநியோகிக்க அனுமதி அளிக்கிறேன்.

*Alfred Devadason*
*E 58, Periyar Nagar,*
*Chennai - 600 082*

*வெளியிடுவோர்*

**WORD OF CHRIST**
Ragem Plaza
Tallakulam
Madurai - 625 002.

முதற் பதிப்பு : 5000
இரண்டாம் பதிப்பு : 5000 நவம்பர் (2000)

# கண்டால்தான் நம்புவேன்

'கடவுளை எனக்குக் காட்டு', 'கடவுளைக் கண்டால்தான் நம்புவேன்', என்று சாதிக்கும் பலரை நாம் காண்கிறோம். ஆனால் நாம் ஒவ்வொருவரும் காணாத பலவற்றை நம்புகிறோம் என்பது மாபெரும் உண்மையாகும்.

## காணவில்லை, ஆனால் உண்டு

காற்றை நாம் கண்டதில்லை. ஆயினும் காற்று உண்டு என்பதை நாம் யாவரும் நிச்சயமாக நம்புகின்றோம். காற்று நம்மீது வீசுவதை உணருவதால் இது எளிதாகின்றது. எனவே, ஒரு பொருளைக் காணாத போதிலும் அதை உணருவதின் மூலம் அது உண்டு என்பதை நாம் யாவரும் நம்புகின்றோம்.

மின்சாரத்தை எவரும் பார்த்ததில்லை. ஆனால் அதன் விளைவுகளைக் காண்கிறோம். விளக்கு எரிவது, மின் விசிறி சுற்றுதல், மின்சாரம் பாயும் கம்பியைத் தொட்டால் அதிர்ச்சியடைதல் (ஷாக்) போன்ற விளைவுகள் மின்சாரம் என்று ஒன்று இருப்பதை நமக்கு நன்கு உணர்த்துகின்றன. ஆகவே, ஒரு பொருளைக் காணாத போதிலும் அதன் விளைவுகளைக் கொண்டு அப்பொருள் இருப்பதை நாம் நம்புகின்றோம்.

'வெளிநாட்டிலிருக்கும் மக்களோடு நாம் எளிதில் உடனடியாகத் தொடர்பு கொண்டு பேசமுடியும்', என்று தொலைபேசியைப் பற்றி அறியாத ஒருவனிடம் கூறினால், அவன் அதை நம்ப மறுப்பான். நமது சத்தம் தூரமான இடத்திற்குச் செல்ல முடியாது என்று அவன் சாதிப்பான். அவன் நம்பாதபடியால் அது பொய்யாகிவிடாது. தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடியும் என்பதை நாம் அறிவோம்.

வானொலி மற்றும் தொலைக்காட்சி (T.V.) அலைகள் எங்கும் இருக்கின்றன என்பதை அவற்றைப்பற்றி அறியாத எவனும் எளிதில் நம்பமாட்டான். அவன் நம்பினாலும், நம்பாவிட்டாலும் அலைகள் இருக்கின்றன என்பது நமக்கு நிச்சயம் தெரியும். இந்த அலைகளை நாம் கண்டதில்லை, நமது உடலில் உணர்ந்ததுமில்லை. எனினும் அவற்றின் மூலம் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டும் இருப்பதால் அவைகள் இருப்பதை விஞ்ஞானிகள் கூறியிருப்பதினின்று ஊகிக்கிறோம். காண்கிறதை மட்டுமே நம்புவேன் என்று நாம் கூறினால் காற்று, மின்சாரம், தொலைபேசி, வானொலி, மற்றும் தொலைக்காட்சி அலைகள் என்பவற்றைக் குறித்து ஒருவர் விளக்கிச் சொன்னபின்பும் நம்ப மறுப்பவனைப் போலாவோம்.

## காணாததை நம்புவது (நம்ப வைப்பது) எப்படி?

வானொலி அலைகள் இருப்பதை ஒருவனை நம்ப வைக்க வேண்டும் எனில்

வானொலிப் பெட்டியைக் காண்பித்து அதன் திருகுகளைச் சரியான அலை வரிசைக்குத் திருப்பி வானொலி நிகழ்ச்சியைக் கேட்கச் செய்வது மட்டுமின்றி அது அவ்வாறு நடைபெறுகிறது என்று விளக்க வேண்டும்.

நமது விளக்கம் அவனுக்கு ஏற்றுக் கொள்ளும்படி தோன்றினால்தான் அவன் நம்புவான்.

## கடவுளைக் காண்பதற்கான இரகசியம்

கடவுள் நமது புறக்கண்களுக்குத் தெரியும் வண்ணம் எப்பொழுதும் காட்சி தந்து கொண்டிருப்பதில்லை. காற்றை உணர்வது போன்று உடலினால் உணரும் படி தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதுமில்லை. ஆனால் அவரை நமது உள்ளத்தினால் உணர்ந்து கொள்ள முடியும்.

வானொலி அலைகளைப் பயன்படுத்த வேண்டுமெனில் வானொலிப் பெட்டியைச் சரியான அலைவரிசைக்குத் திருப்ப வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இவ்வாறே கடவுளைக் காண (அறிந்து கொள்ள, உணர்ந்து கொள்ள, புரிந்து கொள்ள) வேண்டுமெனில் அவரைப் புரிந்து கொள்ளும் ‘அலை வரிசை’க்கு நம் உள்ளத்தைத் திருப்ப வேண்டும்.

## நான் கண்டு கொண்டேன்

இவ்விதமாக எனது ‘அகக் கண்களின்‘ (உள்ளத்தின் உணர்வுகள்) மூலம் நான் கடவுளைக் கண்டு கொண்டேன். பலர் என் உதவியினால் இவ்விதம் அவரைக் கண்டுள்ளனர்.

## நீர் காண விரும்புகின்றீரா

நீரும் மெய்ப்பொருளைக் காண விரும்பினால் இந்நூலைத் தொடர்ந்து படித்து இதில் கூறப்பட்டுள்ள ‘அலைவரிசை’க்கு உமது உள்ளத்தைத் திருப்பினால் கடவுளைக் காண முடியும்.

# கடவுளின் முக்கியமான பண்புகள்

கடவுளைக் காணும் முயற்சியின் ஒரு பகுதியாக "கடவுள் ஒருவர் இருந்தால் அவர் எப்படியிருப்பார்?" என்று சற்றே சிந்தித்துப் பார்ப்போம்.

## கடவுள் பரிசுத்தமானவர்

கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் தவறு எதுவும் செய்யாதவராக, தூய்மையானவராக, பரிசுத்தராக இருப்பார். பரிசுத்தம் என்பது கடவுளிடம் இல்லாவிடில் அதை வேறெங்கும் காண இயலாது. மேலும், தெய்வமே தவறிழைத்தால்,தவறு செய்யும் மனிதனைத் தட்டிக் கேட்கவும் அவனுக்குத் தண்டனை தரவும் தெய்வத்திற்கு அருகதை இல்லை என்று ஆகிவிடும். எனவே தெய்வம் என்று ஒருவர் இருந்தால் அவர் நிச்சயம் பரிசுத்தராகவே இருப்பார்.

தெய்வம் திருடமாட்டார், ஈடுபட மாட்டார், வஞ்சனை செய்ய மாட்டார், பொய் சொல்ல மாட்டார், எந்தவிதத் தவறும் செய்ய மாட்டார். அசுத்தமான தவறிழைக்கும் எவரையும் தெய்வம் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. யாவரும் ஒத்துக் கொள்ளும் வகையில் யாவரும் பின்பற்ற விரும்பும் வகையில் பரிசுத்தராக இல்லாத எவரும் தெய்வம் அல்ல.

## கடவுள் ஆற்றல் மிகுந்தவர்

ஒரு சிறிது சிந்தித்துப் பார்த்தால், இந்த உலகையும், சூரியன், சந்திரன், கோள்கள், விண்மீன்கள் போன்ற நாம் காண்கின்றவையும் மற்றும் நம்மால் காண வியலாதவையும் தானாக உருவாகவில்லை என்பதையும் இவற்றை உருவாக்கிய ஒருவர் உண்டு என்பதையும் புரிந்து கொள்ளலாம். நியூட்டன், ஐன்ஸ்டின் போன்ற அநேக தலைசிறந்த விஞ்ஞானிகளும், தாங்கள் எத்தனையோ விதிமுறைகளையும் தத்துவங்களையும் கண்டு பிடித்த போதிலும், யாவற்றையும் உருவாக்கின ஒருவர் உண்டு என்பதை நன்கு உணர்ந்திருந்தனர்.

தெய்வம் என்று ஒருவர் இருந்தால் சகலத்தையும் உருவாக்கிய அவர் மிகுந்த ஆற்றல் உள்ளவராகத்தான் இருக்க வேண்டும். அவர் இவ்வுலகில் வாழ்ந்தால் தனது ஆற்றலை நிச்சயம் வெளிப்படுத்துவார். இயற்கையின் மீதும் நோய்கள் மீதும் ஆற்றலில்லாத, அற்புதங்கள் செய்ய வலுவற்ற எந்த ஒரு நபரும் தெய்வமாக இருக்க முடியாது.

'மாதா, பிதா, குரு, தெய்வம்', என்று சொல்வதில் முழுமையான உண்மை இருப்பதாகக் கருத இயலாது. குழந்தைக்குச் சுகவீனம் என்றால் மருத்துவரிடம் குழந்தையைக் காண்பிக்கச் செல்கிறோம். தாய், தந்தை, ஆசிரியர் என்பவர்கள் தெய்வமாக இருந்தால் அக்குழந்தையை அவர்களே சுகமாக்கலாம் அல்லவா! தன் குழந்தையைக் கூட சுகமாக்க முடியாத ஒரு தாய் எப்படிதெய்வமாக இருக்க

முடியும்? குழந்தைகள் பெற்றோரை மதிக்க வேண்டும், அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், அவர்களுடைய வயதான காலத்தில் அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்பவை முற்றிலும் சரியே. ஆனால் அவர்களைத் தெய்வமாகக் கொள்வது கூடாது.

ஆற்றல் இல்லாத அநேகப் பொருட்களையும், மிருகங்களையும், மனிதர் களையும் தெய்வமாக ஏற்று வணங்குதல் உலகின் பல பாகங்களில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கம் சரியல்ல.

## கடவுள் அன்பு நிறைந்தவர்

அன்பு என்பது மிகவும் சிறந்த, யாவரும் போற்றக்கூடிய, யாவரும் விரும்பும் பண்பாகும். தெய்வம் என்று ஒருவர் இருந்தால் அவர் அன்பு நிறைந்த வராகவே இருப்பார். அன்பாக இருப்பதாகச் சொல்வதினால் மட்டும் எந்தப் பயனுமில்லை, செயலில் காட்டினால் தான் உண்மையான அன்பு இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ள முடியும்.

தெய்வத்தின் அன்பு மனிதனின் அன்பைவிடச் சிறந்ததாக, மிகுதியான நன்மை விளைவிப்பதாக அமையும். நினைக்க நினைக்க உள்ளமெல்லாம் உருகும் அளவிற்கு அன்பை வெளிப்படுத்துகிறவரே கடவுள்.

மேலே கூறப்பட்ட தெய்வீகப் பண்புகள் நிறைந்த தெய்வம் ஒருவர் இருக்கின்றார். அவர் யார் என்று அடுத்த பகுதியில் காணலாம்.

# யார் அவர்?

உலகில் தெய்வமென்று வணங்கப் படுபவர் பலர், வணங்கப்படுபவைகள் பல உண்டு. அவர்களின் வரலாறுகளைக் கூறும் நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் ஏனைய நூல்கள் அநேகம் இருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து பார்த்தால் தெய்வப் பண்புகள் உள்ள ஒருவரை நாம் காண முடியும். இதுவரை கூறிய பண்புகள் யாவும் ஒருங்கே சிறந்து விளங்கும் ஒரே நபர் இயேசு கிறிஸ்து.

## கட்டுக்கதை அல்ல

இயேசு கிறிஸ்து ஒரு கட்டுக்கதை அல்லது புராணக் கதையில் வரும் ஒரு கற்பனை நபர் அல்ல. அவர் இவ்வுலகில் மனிதனாகப் பிறந்து வாழ்ந்தார். கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் (கி.மு., கி.பி.) என்று கிறிஸ்துவின் காலத்தின் வழியாகத்தான் இவ்வுலக வரலாற்றைப் பிரித்திருக்கின்றோம் என்பதிலிருந்து அவர் உலகில் வாழ்ந்தார் என்பது தெளிவு.

இப்பொழுது இஸ்ரேல் என்று அழைக்கப்படும் நாடு, ரோமப் பேரரசினால் ஆளப்பட்ட காலத்தில், அகுஸ்து இராயன் (Augustus Caesar) என்பவர் ரோமப் பேரரசனாக இருந்தபோது இயேசு கிறிஸ்து பிறந்தார். அவருடைய வரலாறு மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்கள் எழுதியுள்ள நற்செய்தி நூல்களாகவும், இவை அடங்கிய புதிய ஏற்பாடு என்ற நூலாகவும், இதை உள்ளடக்கிய பரிசுத்த வேதாகமம் (பைபிள்) என்ற பெரிய நூலாகவும் கிடைக்கின்றது. வாங்கி வாசித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் தெய்வத்தின் பண்புகள் யாவும் ஒருங்கே அமைந்திருப்பதை நீங்கள் அவருடைய வரலாற்றினின்று கண்டு கொள்வீர்கள். (பைபிள் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகட்கு முன் எழுதி முடிக்கப்பட்ட அறுபத்து ஆறு நூல்களின் தொகுப்பு ஆகும். அதன் பழைய காலப் பிரதிகள் இன்றும் உள்ளன. அது சரித்திர ஆதாரம் கொண்ட உண்மை நூலாகும்).

## பரிசுத்தம் உள்ளவர்

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றவர்களின் வாழ்க்கையினின்று வேறுபட்டதாகும். அவர் பொய் ஏதும் சொல்லவில்லை, திருடவில்லை, புரியவில்லை, தான் சொன்னதைத் தவறு என்று மாற்றிக் கொள்ளவுமில்லை. அவருடைய வாழ்க்கை முழுவதிலும் பரிசுத்தம் காணப்பட்டது.

ஒருமுறை அவருடன் நெருங்கிப் பழகி அவருடன் வாழ்ந்து வந்த அவருடைய சீடர்களும், அவருக்கு எதிரிகளாக இருந்த பரிசேயர் போன்ற மக்களும், பொது மக்களும் இருந்த இடத்தில் யாவரையும் நோக்கி, "என்னிடம் பாவம் உண்டு என்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்?" என்று

கேட்டார். ஒருவராலும் அவர் மீது ஒரு குறையும் சொல்ல முடியவில்லை.

அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் அவருக்கு மரண தண்டனை வழங்கிய ஆளுநராகிய பிலாத்துவும் அவர் குற்றமற்றவர் என்றுதான் கூறினார்கள். புதிய ஏற்பாடு ஒன்றை வாங்கி வாசித்துப் பார்த்தால் அவருடைய வாழ்க்கையின் பரிசுத்தத்தை நீங்கள் கண்டு கொள்ளலாம். இவ்விதமாகப் பரிசுத்தமாக வாழ்ந்து காட்டிய வேறு எவரும் இல்லை.

## மிகுந்த ஆற்றலுள்ளவர்

இயற்கையின் மீதும் எல்லா நோய்களின் மீதும் பெரும் ஆற்றல் கொண்டவராக இயேசு கிறிஸ்து திகழ்ந்தார்.

தன்னுடைய சீடர்களோடும், தாயாருடனும் ஒரு திருமண விருந்தில் பங்கேற்றபோது அத்திருமணத்தில் மக்கள் அருந்தும் பானமாகிய திராட்சரசம் தீர்ந்து விட்டது. அவ்வீட்டில் இருந்த கல்லினால் செய்யப்பட்ட பானைகளில் தண்ணீரை நிரப்பச் சொல்லி அத்தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றி அவர்களின் சிக்கலைத் தீர்த்தார் இயேசு கிறிஸ்து. இன்னொரு முறை தன் சீடருடன் அவர் கடலில் படகுப் பயணம் செய்தபோது சூறாவளிக் காற்றினால் படகு அலைக்கழிக்கப்பட்டது. இயேசு காற்றையும் கடலையும் நோக்கி, "இரையாதே, அமைதியாயிரு", என்று கட்டளையிட்டார். உடனடியாக சூறாவளிக் காற்று நின்றது. கடலின் கொந்தளிப்பும் அடங்கிற்று. இயற்கையின் மீது அவரது ஆற்றலை இவற்றின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## அற்புத சுகமளிப்பவர்

தொழுநோயால் நிரம்பியிருந்த ஒருவன் (குஷ்டரோகி) இயேசுவின் முன்னால் மண்டியிட்டு, "ஆண்டவரே, உமக்கு விருப்பமானால் என்னைக் குணமாக்க உம்மால் கூடும்", என்று கூறினான். இயேசு மனமுருகி அவனைத் தொட்டு உடனடியாகச் சுகமளித்தார். அவரிடம் வந்த குருடர்கள் யாவருக்கும் பார்வையளித்தார், ஊமையும் செவிடுமானவர்கள் பேசவும் கேட்கவும் செய்தார், பக்கவாதத்தால் பல ஆண்டுகள் படுக்கையிலிருந்தவர்களை எழும்பி நடமாடச் செய்தார், இரத்தப் போக்கை நிறுத்திச் சுகமளித்தார், முடவர்களை நடக்கச் செய்தார். இவ்வாறு எல்லா நோய்களினின்றும் குணமாக்கினார். மரித்துப் போன சிலரையும் உயிருடன் எழுப்பினார். அவரைத் தொட்ட யாவரும் அவரால் தொடப்பட்ட யாவரும் குணமடைந்தார்கள். இவற்றைக் கண்டவர்கள் எழுதி வைத்துள்ளனர். (புதிய ஏற்பாட்டை வாங்கி வாசித்துப் பாருங்கள்).

## இப்பொழுதும் சுகமளிக்கிறார்

இயேசுவின் சுகமளிக்கும் ஆற்றல் இன்றும் செயல்படுகிறது. அவருடைய

ஊழியர் பலர் இயேசுவின் பெயரால் அநேகரைக் குணமாக்குவது உலகெங்கும் (தமிழகத்திலும்) நடைபெற்று வருகிறது. பலர் சுகமாவதை இந்நூலை எழுதிய நான் நேரில் கண்டிருக்கிறேன்.

மேலும் நான் மருத்துவர்கள் குணமாக்க முடியாத நிலையில் மரணப்படுக்கையில் இருந்தேன். மருத்துவமனை பலனளிக்காததால் வீட்டிற்கு வந்துவிட்டேன். அப்பொழுது என்னைப் பார்க்க வந்த ஒருவர் வேதப் பகுதி ஒன்றை வாசித்து எனக்கு நம்பிக்கையூட்டினார். பின்னர் மற்றொருவர் இயேசுவின் பெயரால் எனக்காக வேண்டுதல் செய்தபோது இயேசு என்னை முற்றிலும் சுகமாக்கினார்.

மேலே கூறப்பட்டவற்றினின்று இயேசு மிகுந்த ஆற்றலுள்ளவராக இருந்ததையும், அவர் உலகில் மனிதனாக வாழ்ந்த காலத்திலும் இன்றும் அவர் பல அற்புதங்களைச் செய்வதையும் நீங்கள் உணரலாம்.

(இதை வாசிக்கும் நண்பரே, நீர் ஏதேனும் இன்னல், நோய் போன்றவற்றில் உழன்றால் இன்றே இப்பொழுதே அவரை நோக்கி வேண்டுதல் செய்து விடுதலை பெற்றுக் கொள்ளலாம்.)

இயேசு கிறிஸ்து செய்யும் அற்புதங்கள் யாவும் மக்களுக்கு நன்மை தருபவையாக அமைந்திருப்பதை நாம் காணலாம். மக்களின் தொல்லைகளையும், நோய்களையும் பார்த்து மனம் இரங்கி உதவி செய்கிறவர் இயேசு.

(யார் அற்புதங்களைச் செய்தாலும் அதனால் என்ன நன்மை என்று ஆராய்ந்து பாருங்கள்).

## அன்பின் தெய்வம்

எவரிடமும் காணாத அளவிற்கு மக்களிடம் அன்பு செலுத்தியவர் இயேசு. அன்பினிமித்தம் தன்னையே நமக்காகப் பலியாகக் கொடுத்தார். இதற்கான விளக்கத்தைக் கீழே காண்போம்.

இவ்வுலகிலுள்ள யாவருமே தவறு செய்கிறவர்களாக ஆகிவிட்டனர். "எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப் போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை", என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. இது உண்மையென்பதை நாம் அறிவோம். நாம் தவறு செய்யாத பரிசுத்தர்கள் அல்ல. நமது நினைவுகளாலும் சொற்களாலும் செயல்களாலும் அடிக்கடி தவறு செய்வதே நமது அன்றாடக வாழ்க்கையின் நிலையாகும். ஆனால் கடவுள் நீதியுள்ளவராக இருக்கின்றபடியால் அவரவர் செய்யும் தவறுகளுக்கான தண்டனைகளை அவர் வழங்கியே ஆக வேண்டும். இதற்கு மாறாக, கடவுள் அன்புள்ளவராகவும் இருக்கிறார். அவருடைய அன்பு உள்ளம் மனிதனை மன்னிக்க விரும்புகின்றது. எனவே தண்டனை வழங்க

வேண்டியவராகவும் மன்னிப்பு வழங்க வேண்டியவராகவும் இருக்கும் சூழ்நிலையில் நீதி தவறாமல் மன்னிப்பு வழங்க கடவுள் ஏற்பாடு செய்தார். அதற்காக இந்த உலகிற்கு இயேசு என்ற பெயரில் தானே வந்து, தெய்வம் இவ்வுலகில் வாழ்ந்தால் எப்படி வாழ்வார் என்று வாழ்ந்து காட்டி, தன் வாழ்க்கையின் இறுதியில், மனிதன் செய்யும் பாவங்களுக்கு அவனுக்கு வரவேண்டிய தண்டனைகளைத் தன்மேல் ஏற்றுக் கொண்டார். தன்னைக் கைது செய்யவும், சிலுவையில் அறைந்து கொலை செய்யவும் ஒப்புக் கொடுத்தார்.

அசுத்தமான எண்ணங்களை நாம் நினைப்பதற்கு நமக்கு வரவேண்டிய தண்டனைக்குப் பதிலாக, இயேசுவின் தலையில் முட்களால் செய்யப்பட்ட கிரீடம் வைக்கப்பட்டது. தலையினின்று இரத்தம் சொட்டியது. முகத்தினால் நாம் செய்யும் தவறுகளுக்காக நமக்குப் பதிலாக அவருடைய முகத்தில் அடித்து, துப்பினார்கள். (உங்களை நோக்கி யாரேனும் துப்பினால் உங்களுக்கு எவ்வாறு இருக்கும்? இயேசுவையோ முகத்தில் துப்பினார்கள்.) உடம்பெல்லாம் சவுக்கால் அடித்துகிழித்தார்கள். கைகளையும் கால்களையும் சிலுவை மரத்தில் சேர்த்து ஆணிகளை அடித்து அவரைத் தொங்க விட்டார்கள். நமது உடம்பினாலும் கைகள் கால்களாலும் நாம் செய்யும் பாவங்களுக்கு நாம் அடைய வேண்டிய தண்டனைகளை இயேசு தன்மேல் ஏற்றுக் கொண்டார். இறுதியில் அவர் உயிர்விட்டபோது அவருடைய விலாவிலே ஈட்டியைப் பாய்ச்சினார்கள். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்", என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.

துரோகியான, பாவியான மனிதனுக்காகத் தெய்வம் இவ்வுலகிற்கு வந்து இவ்விதமான கோரமான பாடுகளை ஏற்றுக் கொண்ட இந்த மாபெரும் அன்பைச் சற்றுசிந்தித்துப் பாருங்கள். இயேசுவைப் போன்று மனுக்குலத்தை நேசித்தவர்கள் வேறு எவரும் இல்லை. (இந்த அன்பிற்கு நான் தலை வணங்குகிறேன். இந்த மாபெரும் அன்பைப் பார்த்த நான் அவரை ஏற்றுக் கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்? இந்த அன்பிற்கு நான் அடிமை.)

சிலுவையில் நமக்காக இரத்தத்தைச் சிந்தி நமக்காகத் தன் உயிரைக் கொடுத்த இயேசுவை ஒரு கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். ஆனால் அவர் மூன்றாவது நாளில் கல்லறையினின்று உயிரோடு எழுந்தார். இதற்குச் சரித்திர பூர்வமான அநேக ஆதாரங்கள் உண்டு. அவருடைய கல்லறை அன்று முதல் இன்றுவரை திறந்தே இருக்கின்றது. அவர் உயிர்த்தெழுந்த பின்னர் அவரைப் பார்த்தவர்கள் அதைக் குறித்து எழுதியுள்ளனர். தாங்கள் எழுதியவற்றின் உண்மையை நிலைநிறுத்துவதற்காகத் தங்களின் உயிரையும்

ஈந்துள்ளார்கள். மேலும், அன்று முதல் இன்று வரை இயேசுவை நம்பியதால் தங்களுடைய வாழ்க்கையில் மாற்றங்களைப் பெற்றுள்ள கணக்கில்லாத மனிதர்களும், நோய்களின்று விடுதலை பெற்றவர்களும் இயேசு உயிரோடு எழுந்ததற்குச் சான்றுகளாவார்கள்.

நானும் ஒரு சாட்சி. என் வாழ்க்கையில் பல தவறுகள் இருந்தன. ஒரு நாள் என் குற்றங்களை மனதிற்குள்ளாக அவரிடம் கூறி என்னை மன்னிக்கும்படியும் மாற்றும்படியும் வேண்டிக் கொண்டேன். என் வாழ்க்கையை அவர் மாற்றினார். என் உள்ளத்தில் சமாதானத்தையும் நிம்மதியையும் தந்தார். மேலும் நான் ஏற்கனவே கூறியுள்ளது போல என் நோயைக் குணமாக்கி எனக்கு வாழ்வு ஈந்தார். செத்துப்போன மனிதன் எவனும் என்னை மாற்றவோ குணமாக்கவோ முடியாது. உயிருடனிருக்கும் தெய்வத்தால்தான் முடியும். எனவே இயேசு கிறிஸ்து இன்றும் உயிருடனிருக்கிறார் என்பதற்கு நான் ஒரு சாட்சி.

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தனது உயிர்த்தெழுந்த சரீரத்தோடு விண்ணுலகம் ஏறிச்சென்றார். ஆனால் இப்பொழுது யாவருக்கும் தனது பரிசுத்த ஆவியினால் அருள்புரிகின்றார். மேலும், அவர் மீண்டும் இவ்வுலகிற்கு வரப்போவதை வேதம் நமக்கு நன்கு எடுத்துரைக்கிறது. அவர் வருகைக்கு முன் நடக்கும் காரியங்கள் என்று கூறப்பட்டுள்ளவை வேகமாக நிறைவேறி வருகின்றன.

## வேறு யாரும் இல்லையோ

இயேசுவைப் போன்று பரிசுத்தம் உள்ளவர், இயேசுவைப் போன்று ஆற்றல் உள்ளவர், இயேசுவைப் போன்று மக்களின் நோய்களைக் குணமாக்குகின்றவர், இயேசுவைப் போன்று நம்மை நேசித்துத் தம்மையே நமக்காகக் கொடுத்தவர், இயேசுவைப் போன்று உயிர்த்தெழுந்தவர் எவரும் இல்லவே இல்லை.

நீங்கள் யாரை வணங்குகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. யாரையும் குறை கூறுவதும் தாக்குவதும் எனது நோக்கமல்ல. ஆனால் தெய்வத்திற்கு இருக்க வேண்டிய பண்புகளான பரிசுத்தம், ஆற்றல், சுகமளித்தல், அன்பு ஆகியவை இல்லாத எவரையும் தெய்வமாக வணங்குதல் சரியாகத் தெரியவில்லை. இந்தப் பண்புகள் உடைய யாரேனும் உங்களுக்குத் தெரிந்தால் தெரியப்படுத்துங்கள். அப்படி இருப்பவர்களைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ள நான் தயார். அவ்வாறு வேறு யாரேனும் இல்லையெனில் உண்மையான தெய்வமாகிய, நம்மை இரட்சிக்கிற, நமக்குச் சமாதானமும் பாவமன்னிப்பும் சுகமும் அருளுகிற அன்பின் தெய்வமாகிய, நமக்காகத் தன் இரத்தத்தைச் சிந்தி பாடுபட்டு உயிர்விட்டு மீண்டும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுங்கள். இது மதமாற்றம் அல்ல, மனமாற்றம்.

# கடவுளைக் காண்பது எப்படி?

கிறிஸ்தவனாகப் பிறப்பதாலோ, கிறிஸ்தவ சபை ஒன்றில் சேருவதாலோ, பெயர் மாற்றம் செய்வதாலோ கடவுளைக் கண்டுவிட முடியாது. ஆலயத்துக்குச் செல்லுதல், காணிக்கை கொடுத்தல் போன்ற காரியங்கள் மூலமும் அவரை அடைவது கூடாத காரியம் ஆகும். மேலும், கிறிஸ்தவ மதமும், வேறு எந்த மதமும் உங்களை மாற்ற முடியாது. "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். அவரை நம் வாழ்க்கையைப் பொறுப்பேற்று நடத்துகிறவராக ஏற்றுக் கொள்வதே அவரைக் காணும் வழியாகும். மீண்டும் கூறுகிறோம், இது மதமாற்றம் அல்ல, மனமாற்றம் ஆகும். அவரை ஏற்றுக் கொள்வது எப்படி என்பதைக் கீழே வாசியுங்கள்.

பரிசுத்தமும், மாபெரும் ஆற்றலும் நிறைந்திருக்கும் இறைவன் மனிதனிடம் மிகுந்த அன்பு செலுத்துகிறார் என்று வாசித்தோம்.

மனிதனுடைய இயலாமையை அவர் நன்கு அறிவார். தானாக நல்வழியில் தொடர்ந்து நடப்பது மனிதனால் கூடாத காரியம். எடுத்துக்காட்டாக, புதிதாக நடப்பதற்குப் பயிலும் ஒரு குழந்தை ஓர் அடி எடுத்து வைத்ததும் தள்ளாடி விழுந்துவிடும். இவ்வாறு பலமுறை முயற்சி செய்து, விழுந்து எழுவது குழந்தையின் இயல்பு. இக்குழந்தை கரடு முரடானதும், பள்ளங்களும் கற்களும் நிறைந்ததுமாகிய வழியிற் சென்றால் நிச்சயம் விழுந்து அதற்குக் காயங்கள் ஏற்படும். நம்முடைய வாழ்க்கையும் இதைப் போன்றுதான் அமைந்துள்ளது. நல்லவர்களாக வாழ வேண்டும் என்கிற ஆசை நம் யாவருக்கும் உண்டு. பலமுறை முயற்சி செய்தும் இக்குழந்தையைப் போன்று அடிக்கடி தவறி விழுகிறோம்.

ஆனால் இக்குழந்தை கரடுமுரடான பாதையில் செல்லும்போது விழாமல் இருப்பதற்கு ஒரு வழியுண்டு. தன் கையை நீட்டி அப்பா என்று அழைக்குமானால் தகப்பன் அக்குழந்தையின் கரத்தைப் பிடித்து நடத்துவான். அப்பொழுது அக்குழந்தை விழவே விழாது. இதே போன்று நம்மால் நல்லவர்களாக வாழ முடியாததால் நமது உள்ளத்தை இயேசுவிற்குத் திறந்து தருவோமானால், அதாவது "இனி நீர் என்னை நடத்தும்", என்று ஒப்படைப்போமானால், இயேசு நம் வாழ்க்கையைக் "கரம் பிடித்து" நடத்துவார். அப்பொழுது நமது தீய வழிகளினின்று விடுதலை பெற முடியும்.

"மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா", என்று கடவுள் கேட்கிறார். "இதோ வாசற் படியினின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்.....," என்றும் இயேசு கூறியுள்ளார்.

## நாம் செய்ய வேண்டியது என்ன?

பாவத்தில் உழலும் எவரும் கடவுளைக் காண முடியாது. எனவே நம்முடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் தேவை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நமது தவறுகளை இயேசுவிடம் சொல்லி மன்னிப்புக் கேட்க வேண்டும். என் உள்ளத்திற்குள் இப்பொழுது வாரும் என்று கேட்க வேண்டும். இதற்காகக் கீழ்க்கண்டவற்றை மிகவும் கவனமாகப் படித்து அவ்வாறு செய்யுங்கள்.

முதலாவது, உங்கள் வாழ்க்கையில் இதுவரை நீங்கள் செய்த தவறுகளைச் சிறிது நேரம் எண்ணிப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் மாற்றம் தேவை என்பதை நீங்களே ஒத்துக் கொள்வீர்கள். பாவ வாழ்க்கையை விட்டுவிடத் தீர்மானியுங்கள். தனிமையான ஓர் இடத்தில் அமர்ந்து கண்களை மூடி உங்களது வாழ்க்கையில் நீங்கள் செய்த, "பொய் சொல்லுதல், அசுத்தமான எண்ணங்கள், அசுத்தமான ஆசைகள், தவறான பழக்க வழக்கங்கள், ஏமாற்றுதல், திருட்டு, குடிவெறி, பெருமை, பொறாமை, கெட்ட வார்த்தைகள் பேசுதல், சண்டையிடுதல், முன்கோபம்..." போன்ற எல்லாத் தவறுகளையும் நினைத்துப் பார்த்து மனதிற்குள்ளாக ஒவ்வொன்றாகச் சொல்லுங்கள். அதே சமயத்தில் அந்தப் பாவங்களுக்காகத் தன் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்கள் வரை காயப்பட்டு இரத்தம் சிந்திய இயேசுவை நினைத்து மன்னிப்புக் கேளுங்கள். அவ்வாறு கேட்டு முடித்ததும் கீழ்க்கண்ட வேண்டுதலை உணர்ந்து கூறுங்கள்.

## வேண்டுதல்

"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நான் ஒரு பாவி என்பதை ஒப்புக் கொள்கிறேன். தெரிந்தும் தெரியாமலும் எத்தனையோ தவறுகளை நான் செய்திருக்கிறேன். ஆனால் என்னுடைய பாவங்களுக்காக நான் அனுபவிக்க வேண்டிய தண்டனைகளை நீர் சிலுவையிலே அனுபவித்து விட்டீர் என்று நம்புகிறேன். நீர் உயிரோடு எழுந்தீர் என்றும் நம்புகிறேன். பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். என் பாவங்கள் எல்லாவற்றையும் இப்பொழுதே மன்னித்தருளும். மேலும், என் இருதயத்தை, என் வாழ்க்கையை உமக்காகத் திறக்கிறேன். இயேசுவே என் இருதயத்திற்குள் இப்பொழுதே வாரும். இனி, உம்முடைய விருப்பப்படி என் வாழ்க்கையை நீரே ஏற்று நடத்தும். என்னை முற்றிலும் ஒப்படைக்கிறேன், ஏற்றுக் கொள்ளும். என் இருதயத்திற்குள் வருகிறதற்காகவும் என் பாவங்களை மன்னிக்கிறதற்காகவும் உமக்கு நன்றி".

# வேண்டுதலுக்குப் பதில் என்ன?

இந்த வேண்டுதலுக்கு இயேசு ஏற்கனவே பதிலளித்துள்ளார். அவர் அளித்துள்ள பதிலைக் காண்போம்.

## பதில் : I

"இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடு உணவருந்துவேன், அவனும் என்னோடு உணவருந்துவான்", என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். வேதத்தில் வெளிப்படுத்தின விசேஷம் என்ற பகுதியில் மூன்றாம் அத்தியாயம் இருபதாம் வசனத்தில் இது எழுதப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் "அவனோடு உணவருந்துவேன் அவனும் என்னோடு உணவருந்துவான்" என்பது அவரோடு தொடர்ந்து வாழ்வதைக் குறிக்கிறது. ஆனால் வாசற்படியில் நின்று தட்டும் இயேசு கிறிஸ்துவுக்குக் கதவைத் திறந்தால் (அதாவது, என் இருதயத்தைத் திறக்கிறேன். உள்ளே வாரும் என்று அழைத்தால்) அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன் என்று இயேசு சொல்லியிருக்கின்றார். இது உடனடியாக நடக்கின்றது.

(i) "என் இருதயத்தை என் வாழ்க்கையை இந்த நிமிஷத்தில் உமக்காகத் திறக்கிறேன். இயேசுவே என் இருதயத்திற்குள் இப்பொழுதே வாரும்" என்று வேண்டுதல் செய்தீர்களா? ஆம்.

(ii) அவ்வாறு செய்தால் அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன் என்று இயேசு கூறியிருக்கின்றார் அல்லவா? ஆம்

(iii) இயேசு பொய் சொல்வாரா? நிச்சயம் பொய் சொல்லமாட்டார்.

(iv) அப்படியானால் இயேசு இப்பொழுது எங்கு வந்திருக்கின்றார்?

இந்த நான்கு கேள்விகளை மீண்டும் மீண்டும் (இயேசு என் உள்ளத்தில் வந்திருக்கிறார் என்று அறியும்வரை) கேட்டுப் பதில் பெறுங்கள்.

இயேசு உங்கள் உள்ளத்தில் வருவது உங்கள் உணர்ச்சியில் தெரியாமல் இருக்கலாம். மனிதனுடைய உணர்ச்சி மாறக்கூடியது. ஆனால் வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், ஒழியாத இயேசுவின் வார்த்தைகள் ஒருநாளும் மாறாதவை. ஆகவே உங்கள் உணர்ச்சியில் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், இயேசுவின் வார்த்தைகளின்படி அவர் உங்கள் உள்ளத்தில் வந்து விட்டார். இது மாறாத உண்மையாகும்.

## பதில் : II

மேலும், "அவருடைய பெயரில் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களுக்கும் தேவனுடைய பிள்ளைகளாகும் உரிமையைக் கொடுத்தார்" என்று வேதம் கூறுகிறது. (யோவான் நற்செய்தி நூல் முதல் அத்தியாயம் 12 ஆம் வசனம்).

(i) யாருடைய பெயரில் வேண்டுதல் செய்தோம்?
இயேசுவின் பெயரில்தான்.

(ii) இயேசுவே என் இருதயத்தில் வாரும் என்று ஏற்றுக் கொண்டீர்கள் அல்லவா?
ஆம்.

(iii) அவ்வாறு ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் நீங்கள் யார்? நீங்கள் தேவனுடைய பிள்ளை.

மீண்டும் இருமுறை இக்கேள்விகளைக் கேட்டுப் பதில் பெறுங்கள்.

இதற்கு விதிவிலக்கு கிடையாது. ஏற்றுக் கொண்ட அத்தனைபேரும் தேவனுடைய பிள்ளைகள் என்பதால் நீங்கள் நிச்சயமாக தேவனுடைய பிள்ளை. இதை வேதம் தெளிவுபடக் கூறுகிறது.

## பதில் : III

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் (ஒத்துக் கொண்டு அவரிடம் கூறினால்) பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் நம்பத் தக்கவரும் நீதியுள்ளவருமாயிருக்கிறார்" என்று வேதம் கூறுகின்றது. (யோவானின் முதல் நிருபம் முதல் அத்தியாயம் ஒன்பதாம் வசனம்).

இந்த மன்னிப்பையும் தூய்மையையும் பெறுவதற்கு, நாம் மற்றவர்களுக்கு மன்னிக்கத் தயாராக இருப்பதுடன் நினைவில் வரும் எல்லாப் பாவங்களையும் மறைக்காமல் இயேசுவிடம் சொல்லி மன்னிப்பு கேட்க வேண்டும். நீங்கள் மன்னிப்பு கேட்டீர்கள் அல்லவா. எனவே, உங்களை அவர் மன்னித்திருக்கின்றார்.

## பதில் : IV

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு நித்திய ஜீவன் (முடிவில்லா வாழ்வு, பரலோக பாக்கியம்) உண்டு என்று வேதம் கூறுகிறது. (யோவானின் முதல் நிருபம் ஐந்தாம் அத்தியாயம் 12 ஆம் வசனம்) எனவே, உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.

குறிப்பு:– வேண்டுதலுக்குப் பதில் என்ன என்ற மேற்கண்ட பகுதியை இன்னும் இருமுறை மெதுவாக, கருத்தூன்றிப் படியுங்கள்.

# கண்டு கொண்டீர் அல்லவா!

இதுகாறும் கருத்தாகப் படித்து, இந்நூலில் கூறப்பட்டுள்ளவற்றைக் கைக் கொண்ட நண்பரே, உம்முடைய உள்ளத்தில் சமாதானமும், மகிழ்ச்சியும் உருவாகியிருக்கும். மீண்டும் இந்நூலைப் படித்து இதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உமது உள்ளத்தில் இயேசு கிறிஸ்து வந்திருப்பதை நீர் அறிவீர். உள்ளத்தில் இயேசுவை (அகக்கண்களால்) கண்டுவிட்டீர் அல்லவா. உமது உள்ளத்தில் வந்ததற்காகவும், உமது பாவங்கள் யாவற்றையும் மன்னித்த தற்காகவும் அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

எப்படி அவரோடு தொடர்ந்து இணைந்து வாழ்வது என்று நீங்கள் கேட்கலாம். இயேசு நம்மோடு தொடர்ந்து இணைந்து வாழ விரும்புகிறார் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். அவரோடு ஐக்கியமாக வாழ்வதற்கு நீங்கள் செய்ய வேண்டிய சில பொதுவான செயல்களைக் கீழே தருகிறோம்.

(i) இயேசுவின் சிலைகள் படங்கள் என்று இருப்பவற்றைப் பலர் தவறாக வணங்கி வருகின்றனர். அவர் உயிருடனிருக்கின்றார். உயிரற்ற சிலைக்கு மரியாதை செலுத்துவது அவரைக் கேவலப்படுத்து வதாகும். எனவே எந்தச் சிலையையும் வணங்காமல் உங்கள் உள்ளத்தில் இயேசுவை நினைத்து வணங்குங்கள்.

(ii) இறைவன் உங்களோடு பேசவும் பழகவும் விரும்புகின்றார். அவர் பலவிதங்களில் உங்களோடு தொடர்பு கொள்ள முடியும் என்ற போதிலும் பொதுவாக தமது வேதத்தின் மூலமாகவே பேசுகிறார். எனவே ஒரு வேதாகமத்தை வாங்கி அனுதினமும் அதில் ஒரு பகுதியை வாசித்து அதைச் சிந்தித்துப் பார்த்து அவர் உங்களிடம் என்ன கூறுகின்றார் என்று கவனிப்பது அவசியமானது.

(iii) இறைவன் நம்மோடு பேச விரும்புவது மட்டுமின்றி, நாம் பேசுவதைக் கேட்கவும் மிகவும் விரும்புகின்றார். ஒவ்வொரு நாளும் பல தடவை கள் அவரோடு பேசலாம். உங்களின் வாழ்க்கைக்காகவும், குடும்பத் திற்காகவும் மற்றும் அநேகக் காரியங்களுக்காகவும் நன்றி என்று கூறலாம். உங்களுடைய, உங்கள் குடும்பத்தின், உங்கள் நண்பர்களின், உறவினர்களின், நமது நாட்டின் தேவைகளுக்காக அவரிடம் கேட்க லாம். அனுதினமும் அவரோடு பேசுதல் மிகவும் இன்றியமையாதது.

(iv) கடவுளைப் பற்றி பல கருத்துக்களை இச்சிறு நூலில் கூறுவது கடினம். ஆகவே, உங்கள் அருகாமையில் உள்ள, உங்களுக்கு விளக்கம் அளிக்கக்கூடியவர்களிடம் தொடர்பு கொள்வது நல்லது. நீங்கள் உங்கள் முகவரியைத் தெரிவித்தால் இந்தக் காரியத்தில் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறோம்.

(v) உங்களின் வாழ்க்கையில் இயேசுவை ஏற்றுக் கொண்டதை மற்றவர்களுக்குக் கூறுங்கள்.